Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.107/2025

Dated 01-04-2026
Deposition of witness for : PW 7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார் | வயது | : | 57 |
| தந்தை பெயர் | : | ராமசாமி | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | அரசு மருத்துவர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 1** முதல் **3 absent 355 BNSS Petition filed and allowed.**
**Ld. D Counsel present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 23.06.2018 ம் தேதி இரவு 10.26 மணிக்கு மேற்படி மருத்துவமனையில் பணியில் இருந்தபோது வீரப்பன் மகன் கலியபெருமாள் 21 வயதுடைய ஆண் நபரை அவரது நண்பர்

ராமன் என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிகிச்சைக்கு அழைத்து வந்தார். அவரை விசாரித்தபோது 23.6.2018 அன்று இரவு 9-30 மணியளவில் பி.கே ஊசி கம்பெனியில் நான்கு நபர்கள் அடித்து காயம் ஏற்படுத்தியதாக கூறினார்.

3) அவருக்கு கீழ் கண்ட காயங்கள் ஏற்பட்டிருந்தது.

1) இடது முன்கையில் 4x2 செ.மீ. அளவில் ஒரு சிராய்ப்பு காயம் இருந்தது.

2) நெஞ்சின் நடுபகுதியில் 2 x 2 செ.மீ அளவில் ஒரு சிராய்ப்பு காயம் இருந்தது.

3) நடு தலையில் இடது பகுதியில் 10 x1 செ.மீ. அளவில் எலும்பு ஆழம் வரை ஒரு கிழிந்த காயம் இருந்தது.

4) அவருக்கு சிகிச்சை அளித்து உள்நோயாளியாக அனுமதித்தேன். நான் வழங்கிய விபத்து பதிவேடு **அ.சா.ஆ.4** ஆகும்.

5) ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) சிராய்ப்பு காயம் என்பது ஒரு நபர் தடுமாறி கீழே விழும்போது ஏற்பட வாய்ப்புண்டா என்றால் உண்டு.

2) தலையில் உள்ள காயம் ஒரு கடினமான பொருளில் மோதும்போது ஏற்பட வாய்ப்புண்டா என்றால் உண்டு.

மறு விசாரணை

இல்லை.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.04.01 21:11:27 +0530